# எறும்பியப்பாவும் கோயிலண்ணனும்

**(ஸுதர்சனர் ஸ்ரீ உ.வே. எஸ்.க்ருஷ்ணஸ்வாமிஅய்யங்கார் ஸ்வாமி)**

நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யபரம்பரையில் சரமாசார்யராய், ப்ரத$_{2}$மாசார்யரான நம்பெருமாளுக்கும் ஆசார்யராய் யதிராசருடைய புநரவதார பூ$_{4}$தரான மணவாளமாமுனிகளுக்கு ஜ்ஞாநப$_{4}$க்திவைராக்$_{3}$யங்களில் தலைசிறந்த சிஷ்யர்கள் பலர் உண்டு. அவர்களில் எண்மர் ‘அஷ்டதிக்க$_{3}$ஜங்கள்’ என்று பெயர் பெற்றவர்கள்.

‘‘பாராருமங்கை திருவேங்கடமுனி பட்டர்பிரான்
ஆராமஞ்சூழ் கோயில் கந்தாடை யண்ணன் எறும்பியப்பா
ஏராருமப்பிள்ளை அப்பிள்ளார் பரவாதி அண்ணன் என்னும்
பேரார்ந்த திக்கயம் சூழ் வரயோகியைச் சிந்தியுமே’’

என்று யதீந்த்$_{3}$ரப்ரவணப்ரப$_{4}$ாவத்தில் காட்டப்பட்ட பாட்டில் அநுஸந்தி$_{4}$த்தபடி *1.* வரமங்கைமுநி (வானமாமலைஜீயர்) 2. திருவேங்கடராமாநுஜஜீயர், 3. பரவஸ்துபட்டர்பிரான்ஜீயர் 4. கோயில்கந்தாடைஅண்ணன் 5.எறும்பியப்பா 6.அப்பிள்ளை 7.அப்பிள்ளார் 8. ப்ரதிவாதி$_{3}$ ப$_{4}$யங்கரம் அண்ணா என்பவரே அவர்கள்.

இவர்களில் கோயில் கந்தாடைஅண்ணன் எம்பெருமானாருடைய அந்தரங்க சிஷ்யரான முதலியாண்டானின் திருவம்சத்தில் அவதரித்தவர். எம்பெருமானாருக்கு முதலியாண்டானைப்போலே மணவாளமாமுனிகளுக்குப் பாதுகாஸ்த$_{2}$ாநமாயிருந்தவர். இவ்விஷயம் எறும்பியப்பா ஸாதித்த வரவரமுநி சதகத்தின் முதல் ச்லோகத்தில்

‘‘வரவரமுநிவர்ய பாது$_{3}$ரத்நம் வரத$_{3}$கு$_{3}$ரும் கு$_{3}$ருமாஶ்ரயே கு$_{3}$ருணாம் ।
உபநிஷது$_{3}$பகீ$_{3}$தமர்த்த$_{2}$ தத்த்வம் ததி$_{3}$ஹ யதீ$_{3}$யவஶம்வத$_{3}$ம் ஸமிந்தே$_{4}$ ॥

(உபநிஷத்தினாலே முழங்கப்பட்ட சரமபர்வ நிஷ்டையாகிற பயன் எவருடைய அடியார்களுக்கு வசப்பட்டு விளங்குகிறதோ அத்தகைய பெருமையை யுடையவராய், ஆசார்யர்களுக்கும் ஆசார்யராய், மணவாள மாமுனிகளின் சிறந்த பாதுகையாயிருக்கும் கோயிலண்ணனை ஆஶ்ரயிக்கிறேன்.) என்று அநுஸந்தி$_{4}$க்கப்பட்டது.

கோயிலண்ணனுடன் தே$_{3}$ஹஸம்ப$_{3}$ந்த$_{4}$ம் உடையவராய் சோள ஸிம்ஹபுரத்துக்கு அருகிலுள்ள எறும்பி என்னும் ஊரில் முடும்பைக் குடியில் ‘பெரியசரண்யாசார்யர்’ என்பவருக்குப் புத்ரராக அவதரித்த ‘தே$_{3}$வராஜர்’ என்னும் எறும்பியப்பா எம்பெருமானாருக்கு வடுகநம்பியைப்போலே மணவாளமாமுநிகளையொழிய தேவுமற்றறியாதே மாமுநிகளுக்கு அத்யந் தாபி$_{4}$மதராயிருப்பர் என்று பெரியதிருமுடியடைவு கூறும். கோயில் அண்ணனுக்கும் எறும்பியப்பாவுக்கும் உள்ள பந்தவிஶேஷங்கள் எறும்பி யப்பா அருளிச்செய்த வரவரமுநிசதகத்திலும், பிள்ளைலோகார்யஜீயர் அருளிச்செய்த யதீந்த்$_{3}$ரப்ரவணப்ரப$_{4}$ாவத்திலும் விவரிக்கப்பட்டுள்ளன.

அவற்றை அடியொற்றிச் சுருக்கமாக விண்ணப்பிக்கிறேன் இங்கு.

கோயில் அண்ணன் முதலான மஹாசார்யர்கள் பலர் மாமுநிகளிடம் ஈடுபட்டு அவரிடம் ஆஶ்ரயித்ததை எறும்பியப்பா கேள்விப்பட்டார். திருமலையாத்ரையாக வந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவர் மூலமாக இவ்விஷயங்களையும் மாமுநிகளின் வைப$_4$வங்களையும் செவியுற்றார் அப்பா. தம்முடைய தகப்பனுரான பெரியசரண்யாசார்யரிடம் அனுமதி பெற்று மாமுநிகளிடம் அர்த்த$_2$ க்$_3$ரஹணம் செய்துவருவதற்காக அந்த ஸ்ரீவைஷ்ணவரோடு ஸ்ரீரங்கத்துக்கு வந்தார். கந்தாடையண்ணன் நெருங்கின உறவினராகையாலே அவர் திருமாளிகையிலே அமுது செய்தருளி அவரோடு மாமுநிகளை ஸேவிக்கச் சென்றார். மாமுநிகளும் அப்போது பரத்வத்தைத் தெரிவிக்கும் ''உயர்வற உயர்நலம்'' ப்ரவேசத்தை விளக்கியருளினார். அதைக்கேட்டு மாமுநிகளின் ஸர்வதோமுக$_2$மான பாண்டித்யத்தைக் கண்டு வியப்புற்றார் அப்பா. அதற்குமேல் பெரியஜீயர் இவரை மடத்தில் அமுது செய்யப் பிரார்த்தித்தார்.

'யதியின் அன்னத்தைப் புசிக்கலாகாது' என்னும் ஸாமாந்ய சாஸ்த்ரத்தை நினைத்து, அதை மறுத்துவிட்டார் அப்பா. போனகம் செய்தசேடம் தருவரேல் புனிதமன்றே' (திருமாலை.41) என்கிறபடியே இந்த ஸாமாந்யசாஸ்த்ரத்துக்கு ஸ்ரீவைஷ்ணர்கள் விஷயத்தில் விதிவிலக்கு இருப்பதை அவர் அறியவில்லை. அதனால் மாமுநிகளின் சேஷப்ரஸாதத்தை ஸ்வீகரித்து வந்த கோயில் அண்ணனிடம் வெறுப்புற்று அவர் திருமாளிகைக்கும் செல்லாமல் எறும்பிக்குத் திரும்பினார் எறும்பியப்பா. இப்படி இவர் மாமுநிகளிடம் அபசாரப்பட்டு, தம்மிடம் விடைகொள்ளாமலும் ஊருக்குத் திரும்பிவிட்டதை அறிந்த கோயிலண்ணன் எறும்பியப்பா உஜ்ஜீவிக்கவேண்டும் என்னும் பரமக்ருபையாலே மாமுநிகளைப் பிரார்த்தித்து அவரைக்கொண்டே எறும்பியப்பாவை மறுபடி தம்மிடம் வரும்படி அழைக்கும் ஸ்ரீமுக$_2$ம் ஒன்றை எழுதியனுப்பச் செய்தார். எறும்பியப்பா ஊர் சேர்ந்தவுடனே அந்த ஸ்ரீமுக$_2$மும் அவரை அடைந்தது. அதைப் பார்த்த பின்பும் அப்பாவுக்கு மாமுநிகளிடம் திரும்பிவர வேண்டும் என்னும் எண்ணம் எழவில்லை.

அன்று தமது திருவாராதனப்பெருமாளான சக்ரவர்த்தித்திருமகனுக்குத் திருவாராதனம் செய்வதற்காகக் கோயிலாழ்வாரைத் திறப்பதற்கு எவ்வளவு முயன்றும் அப்பாவால் திறக்கமுடியவில்லை. ''ஆதிஶேஷனின் அவதாரமான மாமுநிகளிடம் நீர் அபசாரப்பட்டுவிட்டீர். உம்மிடம் பரமக்ருபையாலே கோயில் அண்ணனால் பிரார்த்திக்கப்பட்டு அவர் ஸாதித்த ஸ்ரீமுக$_2$த்தையும் உபேக்ஷித்துவிட்டீர். நீர் உடனே சென்று மாமுநிகளை ஆஶ்ரயித்தாலொழிய, நாம் உம்முடைய உபசாரங்களை ஏற்க மாட்டோம்'' என்று சக்ரவர்த்தித் திருமகனின் அசரீரி வாக்கும் அவரது செவியில் விழுந்தது. தம் தவறை உடனே உணர்ந்து எறும்பியப்பா ஸ்ரீரங்கத்துக்குச் சென்று, கோயிலண்ணனைப்

புருஷகாரமாகக் கொண்டு மாமுனிகளின் திருவடிகளை ஆச்ரயித்தார். இவ்விஷயங்கள் யதீந்த்$_3$ரப்ரவணப்ரப$_4$ாவத்திலும் வரவரமுநிசதகத்தில் எறும்பியப்பா ஸாதித்த பின்வரும் ச்லோகங்களிலும் தெளிவாகக் கூறப்பட்டன.

“நித்யம் பத்யு: பரிசரணதோ வர்ணதோ நிர்மலத்வாத்
வ்ருத்யா வாசாம் விபு$_3$த$_4$ஸரிதஸ் சாதுரீமுத்$_3$கி$_3$ரந்த்யா |
ஶேஷ: ஸ்ரீமாந் இதி ரகு$_4$பதேரந்தரேணாऽபி வாணீ:
கோ நாம த்வாம் வரவரமுநே கோவிதே$_3$ா நாவக$_3$ந்தும் || *(15)*

*(வரவரமுனிவரே! எப்போதும் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்கையாலும், வெள்ளை நிறத்தாலும், கங்காப்ரவாஹத்தை ஒத்த வாக்வைப$_4$வத்தாலும் அடியேனது திருவாராதனப்பெருமாளான சக்ரவர்த்தித்திருமகனின் அசரீரி வாக்கையொழியவே தேவரீரை ஆதிசேஷாவதாரமென்று எவன்தான் அறுதியிடமுடியாது.)*

“ஸாராऽஸாரப்ரமிதி ரஹிதஸ் ஸர்வத$_2$ா ஶாஸநம் தே
ஸத்$_3$ய: ஸ்ரீமந்! கபிகரக்ருதாம் மாலிகாமேவ குர்யாம் |
நோசேத் ஏதத்$_3$வரவரமுநே தூ$_3$ர தூ$_3$ரம் ஶ்ருதீநாம்
மௌலௌ குர்யாத் புருஷவ்ருஷபே$_4$ா மைதிலீப$_4$ாக$_3$தே$_4$யம் || (25)

(ஸ்ரீமத் வரவரமுனிவரே ! கைக்கொள்ளத்தக்கது எது கைவிடத்தக்கது எது என்று அறியாத அடியேன், நான்மறைகள் தேடி என்றும் காணமாட்டாச் செல்வனை என்னுடைய பெருமானை ஸீதாராமன் தேவரீருடைய ஸ்ரீமுக$_2$த்தை தலைமேல் கொண்டு ஆணையிடாமலிருந்தால், அதை குரங்குகைப்பூமாலைபோலே அவமதித்திருப்பேன்.)

“லக்ஷ்யம் த்யக்த்வா யத$_3$பி விப$_2$லோ ஜாயதே ராமபாணோ
வாணீ தி$_3$வ்யா வரவரமுநே ! ஜாது நைவம் த்வதீ$_3$யம் |
ஸோऽயம் ஸர்வம் மத$_3$பி$_4$லஷிதம் வர்ஷதி ஸ்ரீமுக$_2$ாப்த$_3$:
தஸ்மை நித்யம் ததி$_3$ஹ பரமம் த$_4$ாம கஸ்மாத்$_3$ து$_3$ராபம் || (26)

(வரவரமுனிவரே! ராமபாணம் தன் இலக்கைத் தப்பினாலும் தப்பலாம். உம்முடைய வாக்கு ஒருபோதும் வீணாகாது. உம்முடைய ஸ்ரீமுக$_2$மாகிற மேகம் அடியேனுக்கு எல்லா விருப்பங்களையும் பொழிகிறது. ஆகையால் அடியேனுக்குப் பரமபதம் எப்படி அரிதாகும்? மிக எளியதேயாகும்.)

“ப்ரேமஸ்த$_2$ாநம் வரவரமுநே! ஸந்து ஸந்த: ஶதம் தே
துல்ய: கோ வா வரத$_3$கு$_3$ருணா தேஷு நாராயணேந |
ஸாநுக்ரோஶ: ஸ து மயி த்$_3$ருட$_4$ம் ஸர்வதே$_3$ாஷாஸ்பதே$_3$ऽஸ்மிந்
மாமேவம் தே மநஸி குருதே மத்ஸம: கோ ஹி லோகே || (27)

(வரவரமுனிவரே! தேவரீருக்கு இனியவர்களான சிஷ்யர்கள் நூற்றுக்கணக்கில் உளர். அவர்களில் வரத$_3$நாராயணரெனும் கோயிலண்ணனுக்கு ஒப்பாக எவருளர்? எல்லா தோஷங்களுக்கும் இருப்பிடமான என் விஷயத்தில் தேவரீர்

ஸ்ரீமுக$_2$ம் ஸாதிக்கத் திருவுள்ளம் பற்றும்படி அவர் மிகவும் இரங்கியருளினு ரன்ரு, ஆகவே என்னை ஒப்பார் இவ்வுலகில் யார் உளர்?).

இப்படி, தாம் மணவாளமாமுனிகளை ஆச்ரயிப்பதற்குப் புருஷகாரராகக் கோயிலண்ணன் அமைந்தபடியாலேயே “வரத$_3$கு$_3$ரும் கு$_3$ருமாஶ்ரயே கு$_3$ருணம்” என்று முதல் ச்லோகத்திலும் ‘வரத$_3$: ஸார்த்தநாமா கு$_3$ரூர் மே’ (என்னுடைய ஆசார்யரான வரதர் பொருத்தமான திருநாமத்தையுடையவர்) என்று 28வது ச்லோகத்திலும், “தம் த்வாம் ஏவம் வத$_3$தி வரதே$_3$ ஸௌஹ்ருத$_3$ம் மே யதி$_3$ ஸ்யாத்$_3$ வரவரமுநே! ஸந்நிதெ$_4$ள நித்யவாஸ:” (உம்மையே உபாயமாக அருளிச்செய்யும் கோயிலண்ணன் விஷயத்தில் எனக்கு நன்னெஞ்சமும், அவர் ஸந்நிதி$_4$யில் நித்யவாஸமும் உண்டாகட்டும்.) என்று 29வது ச்லோகத்திலும் அவரையே தமக்கு ஆசார்யராகவும், அவரது ஸந்நிதி$_4$யில் தமக்கு நித்யவாஸமே ப்ராப்யமாகவும் அறுதியிடுகிருர் எறும்பியப்பா தமது வரவரமுனி சதகத்தில்.

அந்த சதகத்தின் இறுதியில் மாமுனிகளுக்குப் பல்லாண்டு பாடும் போதும் “நீரோக$_3$ஸ்த்வம் வரத$_3$கு$_3$ருணு நித்யயுக்தோ த$_4$ரித்ரீம் பாஹி ஸ்ரீமந்! வரவரமுநே! ப$_3$த்மயோநேர்தி$_3$நாநி” *(96)* (வரவரமுனிவரே! தேவரீர் கோயிலண்ணனுேடு கூட பரமஸுகத்துடன் ப்$_3$ரஹ்மகல்பம் முடியும் வரையில் எழுந்தருளியிருந்து உலகை ரக்ஷிக்கவேண்டும்) என்றும்,

ஜயது யஶஸா துங்க$_3$ம் ரங்க$_3$ம் ஜகத்த்ரயமங்க$_3$ளம்
ஜயது ஸுசிரம் தஸ்மிந் பூ$_4$மா ரமாமணிபூ$_4$ஷணம்।
வரத$_3$கு$_3$ருணு ஸார்த்$_3$த$_4$ம் தஸ்மை ஶுப$_4$ாந்யபி$_4$வர்த்$_3$த$_4$யந்
வரவரமுநி: ஸ்ரீமாந் ராமாநுஜோ ஜயது க்ஷிதௌ ॥ *(102)*

(மூவுலகுக்கும் மங்க$_3$ளமான மிக உயர்ந்த ஸ்ரீரங்கம் கீர்த்தியுடன் வெற்றி பெறுக. அங்கு பெரியபிராட்டியாருக்கு அணிகலமாயிருக்கும் பெரியபெருமாள் நீண்டநாள் விளங்குக. அப்பெரியபெருமாளுக்கு மங்க$_3$ளங்களை வளர்த்துக் கொண்டு கோயிலண்ணனுேடுகூடிய மணவாளமாமுனிகளாகிற ஸ்ரீமத்$_3$ராமாநுஜர் இவ்வுலகில் வெற்றிபெறுக.) என்றும் கோயிலண்ணனுேடு சேர்த்தே பல்லாண்டு பாடுவதிலிருந்து எறும்பியப்பாவுக்கு கோயிலண்ணனிடமிருந்த பெருமதிப்பு விளங்குகிறது.

கோயிலண்ணன் தே$_3$ஹஸம்ப$_3$ந்தி$_4$கள் ஸத$_3$ாசாரம் இல்லாமல் இருப்பதைக் கண்டு எறும்பியப்பா பிரார்த்திக்க, மணவாளமாமுனிகள் ஸப்தகே$_3$ாத்ர வ்யவஸ்தைசெய்து, அந்த ஏழுகே$_3$ாத்ரத்தாருக்குள்ளேயே தே$_3$ஹஸம்ப$_3$ந்த$_4$ம் செய்துகொள்ளும்படி நியமித்தார் என்னும் வரலாறும் யதீந்த்$_3$ரப்ரவண ப்ரப$_4$ாவத்தில் காணப்படுகிறது. இவ்வண்ணமாகக் கோயிலண்ணனுக்கும் எறும்பியப்பாவுக்கும் இருந்த பரஸ்பரப்ரேமப$_3$ந்த$_4$ம் சுருக்கமாக விண்ணப்பிக்கப்பெற்றது.